## முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் டோக்கியோவில் ரூ.818 கோடியில் 6 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்



**சென்னை:** டோக்கியோவில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பானை சேர்ந்த 6 நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 2024 ஜனவரியில் நடக்க உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கவும், முதலீடுகளை ஈர்க்கும் வகையிலும் முதல்வர் ஸ்டாலின் அரசுமுறைப் பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு சென்றுள்ளார். சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் சென்றுள்ள அவர், அங்கு முதலீட்டாளர்கள் மற்றும் ஜப்பான் நிறுவனங்களின் நிர்வாகிகள், உயர் அதிகாரிகளை சந்தித்து வருகிறார்.

இந்நிலையில், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு (ஜெட்ரோ) சார்பில் நேற்று நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்றார்.

இதைத் தொடர்ந்து, நேற்று மாலை முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் ஜப்பானை சேர்ந்த 6 தொழில் நிறுவனங்களுடன் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி

நிறுவனம் ரூ.818.90 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

கையெழுத்தான ஒப்பந்தங்கள் விவரம்:

**6 நிறுவனங்களுடன் ஒப்பந்தம்**

> காஞ்சிபுரம் மாவட்டம் மாம்பாக்கத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 13 ஏக்கர் பரப்பில் ரூ113.90 கோடி முதலீட்டில் டிரக் வாகனங்களுக்கான உதிரிபாகங்கள் தயாரிப்பதற்கான புதிய ஆலை நிறுவ கியோகுட்டோ சாட்ராக் நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

> திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள இருசக்கர, நான்குசக்கர வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் மிட்சுபா இந்தியா நிறுவன தொழிற்சாலையை ரூ.155 கோடியில் விரிவாக்கம் செய்ய மிட்சுபாவுடன் ஒப்பந்தம்.

> தமிழகத்தில் கட்டுமானம், கட்டுமான பொறியியல் மற்றும் அதுதொடர்பான வணிகத்தை மேற்கொள்ள ஷிமிசு நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

> பாலிகார்பனைட் தாள், கூரை அமைப்புகள், கட்டுமானத் துறையில் பயன்படும் எலெக்ட்ரானிக் கூறுகளுக்கான எக்ஸ்ட்ரூஷன் லைன்கள் தயாரிக்க ரூ.200 கோடி முதலீட்டில் தொழிற்சாலை நிறுவ பாலிஹோஸ் நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான கோயீ நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

> விண்வெளி, பாதுகாப்பு, கட்டுமான உபகரணங்கள் துறையில் பயன்படுத்தப்படும் உயர்தர எஃகு பாகங்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ரூ.200 கோடி முதலீட்டில் நிறுவ சடோஷோஜி மெட்டல் ஒர்க்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

> சோலார், எஃகு ஆலைகள், விண்வெளி, குறைகடத்தி தொழில்களுக்கான துருப்பிடிக்காத எஃகு நெகிழ்வு குழல்களை உற்பத்தி செய்வதற்கான ஆலையை ரூ.150 கோடியில் நிறுவ டஃப்ல் நிறுவனத்துடன் ஒப்பந்தம்.

இந்த 6 நிறுவனங்களுடன் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில், தமிழக தொழில் துறை அமைச்சர் டிஆர்பி ராஜா, துறை செயலர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவன மேலாண் இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் கியோகுட்டோ சாட்ராக், மிட்சுபா, ஷிமிசு, கோயீ, சடோஷோஜி மெட்டல் ஒர்க்ஸ், டஃப்ல் நிறுவனங்களின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

## நரிக்குறவர் சமூகத்தினருக்கு எஸ்.டி. சான்றிதழ்: வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டது தமிழக அரசு




**சென்னை:** நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகத்தினருக்கான அரசியலமைப்பு, பாதுகாப்பு, நலத் திட்டங்கள் குறித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

இதுகுறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலர் க.லட்சுமி பிரியா வருவாய் நிர்வாக ஆணையருக்கு, அனுப்பியுள்ள கடிதம்: அட்டை வடிவிலான எம்பிசி சான்றிதழை ரத்து செய்துவிட்டு, பழங்குடியினர்

(எஸ்.டி.) சாதிச் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக, புதிய இணையத் தொகுப்பை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை சாதிச் சான்றிதழ் பெறாத புதிய விண்ணப்பதாரர்களுக்கு, பழங்குடியினர் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக வருவாய்த் துறையால் அவ்வப்போது வெளியிடப்பட்ட நடைமுறைகள், வழிகாட்டிக் குறிப்புகள், வரையறைகளைப் பின்பற்றி சான்றிதழ் வழங்கப்படும். அவர்கள் சான்றிதழ் கோரி இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க வேண்டும். உரிய வழிகாட்டுதல்படி, கோட்டாட்சியரால் சான்றிதழ் வழங்கப்படும்.

ஏற்கெனவே மின் வடிவிலான மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தால், கோட்டாட்சியர், சார் ஆட்சியரால் பராமரிக்கப்பட்டு வரும் தரவு தளத்தில் பழங்குடியினர் என்று மாற்றி, ஏற்கெனவே வழங்கிய சான்றிதழை ரத்து செய்து, இணையம் வழியாக புதிய சான்றிதழ் வழங்கப்படும். இதற்கான நடைமுறை தனியாகத் தொடங்கப்படும்.

சான்றிதழ் தொலைந்து போவது, அல்லது ஆவணங்கள், பதிவேடுகள் இல்லாமல் இருப்பது ஆகியவை தொடர்பான விண்ணப்பங்களை, புதிய சான்றிதழுக்கான விண்ணப்பங்களாகக் கருதி, பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## துருக்கி அதிபர் தேர்தல் 2023: மீண்டும் ஆட்சியைப் பிடித்தார் எர்டோகன்



**அங்காரா:** துருக்கி நாட்டின் அதிபராக மீண்டும் எர்டோகன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். நேற்று நடந்த மறு தேர்தலில் அவர் பெரும்பான்மையைப் பெற்று மீண்டும் அதிபராகியுள்ளார்.

69 வயதாகும் தய்யீப் எர்டோகன் கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் துருக்கியை ஆட்சி செய்து வருகிறார். 2003 முதல் 2014 வரை துருக்கியின் பிரதமராக இருந்த அவர், 2014-ஆம் ஆண்டு அப்பதவியை கலைத்து நாட்டின் உச்ச அதிகாரமாக அதிபர் பதவியை கொண்டு வந்தார். அதன்பிறகு தற்போது வரை துருக்கியின் அதிபராக அந்நாட்டை ஆட்சி செய்து வந்தார்.

இந்த நிலையில், கடந்த பிப்ரவரி 6-ம் தேதி துருக்கி - சிரிய எல்லையில் அடுத்தடுத்து ஏற்பட்ட பயங்கர பூகம்பங்களால் 50,000-க்கும் அதிகமானோர் பலியாகினர். லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர். இந்த பூகம்பத்தின்போது மீட்புப் பணிகளை சரிவர முடுக்கிவிடவில்லை என்று அதிபர் எர்டோகன் மீது பொதுமக்கள் கடும் அதிருப்தியில் இருந்தனர். பொருளாதார ரீதியாகவும் எர்டோகன் மீது மக்களிடையே எதிர்ப்பு அலை இருந்தது.

இதையடுத்துதான், துருக்கி அதிபர் எர்டோகனுக்கு எதிராக ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் ஒன்று திரண்டு துருக்கியின் காந்தி என்று அழைக்கப்படும்

குடியரசு மக்கள் கட்சியை சேர்ந்த கெமல் கிளிக்டரோக்லுவை எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக தேர்ந்தெடுத்தனர்.

இந்தச் சூழலில் பெரும் பதற்றத்துக்கிடையே கடந்த 15 ஆம் தேதி துருக்கி அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் அதிபர் எர்டோகன் 49.6% வாக்குகளும், கெமல் கிலிக்டரோக்லு 44.7% வாக்குகளும், தேசியவாத வேட்பாளர் சின ஒகன் 5.2% வாக்குகளும் பெற்றனர்.

துருக்கியின் அரசியல் வழக்கம்படி தேர்தலில் 50% வாக்குகளை பெற்றால்தான், அது பெரும்பான்மை. அந்த வகையில் 0.4% வாக்குகள் குறைவாக பெற்றதால், பெரும்பான்மையை எர்டோகன் தவறவிட்டார். இதனைத் தொடர்ந்து அடுத்தச் சுற்று தேர்தல் துருக்கியில் நேற்று மே 28-ஆம் தேதி நடைபெற்றது.

இந்நிலையில் 99% வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட சூழலில் எர்டோகன் 52% வாக்குகளும் அவரை எதிர்த்திப் போட்டியிட்ட கெமால் 48 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர். இது அதிகாரபூர்வ தகவல். இந்நிலையில் துருக்கி தேர்தல் ஆணையமும் எர்டோகன் வெற்றியை உறுதி செய்துள்ளது. மீதமுள்ள 1 சதவீத வாக்குகள் எண்ணப்பட்டு அதில் கெமால் நிறையா வாக்குகள் பெற்றாலும்கூட இந்த 52 சதவீதத்தை நெருங்க இயலாது என்பதால் வெற்றி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தன்னை நம்பி மேலும் 5 ஆண்டுகள் அளித்துள்ள மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார். அதேபோல், ஏற்கெனவே 21 ஆண்டுகள் ஆட்சி செய்ததால் இப்போது மக்கள் நம்பிக்கையின் பேரில் அளித்துள்ள வாக்குகளுக்கு உரிய நன்மை செய்வேன் என்றார்.

## சென்னை விமான நிலைய இயக்குநராக சி.வி.தீபக் நியமனம்



**சென்னை:** சென்னை விமான நிலைய இயக்குநராக சி.வி.தீபக் நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை விமான நிலையஇயக்குநராக இருந்த சரத்குமார்கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில் டெல்லியில் உள்ள தலைமைஇடத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், சென்னை விமான நிலைய இயக்குநராக சி.வி.தீபக் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஏற்கெனவே தீபக் டெல்லி தலைமையகத்தில் வரிவிதிப்பு பிரிவில் பொது மேலாளராக (நிதி மற்றும் கணக்கு) பணியாற்றி வந்தார். சென்னை லயோலா கல்லூரியில் பி.காம் படித்த இவர், டெல்லியில் எம்பிஏ படித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்பு தகுதி பெற்ற மருத்துவர்களுக்கு மட்டுமே அல்ட்ரா சவுண்ட் தொழில்நுட்ப பரிசோதனை செய்யும் அனுமதி: சென்னை ஐகோர்ட்



**சென்னை:** சிசு பாலின தேர்வு தடைச் சட்டத்தின்படி, சிறப்பு தகுதி பெற்றவர்கள் மட்டுமே கர்ப்பிணி பெண்களுக்கு அல்ட்ரா சவுண்ட் தொழில்நுட்ப பரிசோதனைகள் செய்ய தகுதி உள்ளது என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஹோமியோபதி மற்றும் யோகா போன்ற இந்திய மருத்துவமுறைகளான ஆயுஷ் மருத்துவ படிப்புகளை படித்து, அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை தொடர்பான சான்றிதழ் முடித்த மருத்துவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு ஒலியியல் பரிசோதனைகள் செய்ய அனுமதிக்க மத்திய - மாநில அரசுகளுக்கு உத்தரவிடக் கோரி தமிழ்நாடு ஆயுஷ் ஒலியியல் பரிசோதனையாளர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, "சிசு பாலின தேர்வு தடைச் சட்டத்தில், கர்ப்பிணி பெண்களுக்கு அல்ட்ரா சவுண்ட் தொழில்நுட்ப பரிசோதனைகள் மேற்கொள்ள பல்வேறு சிறப்பு தகுதிகளை வரையறுத்துள்ளது. அந்தத் தகுதிகளை பெற்ற மருத்துவர்களுக்கு மட்டுமே இந்த பரிசோதனைகளை நடத்த தகுதி உள்ளது.

இந்த சிறப்பு தகுதிகளைப் பெறாத மருத்துவர்கள், இச்சோதனைகளை நடத்த தகுதியில்லை. மேலும், மனுதாரர் சங்க உறுப்பினர்கள் எக்ஸ்ரே, இசிஜி, உள்ளிட்ட அடிப்படை பயிற்சி மட்டுமே பெற்றுள்ளதால் கர்ப்பிணி பெண்களுக்கு அல்ட்ரா சவுண்ட் பரிசோதனைகள் செய்ய தேவையான தகுதியைப் பெறவில்லை. எனவே, இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள அவர்களை அனுமதிக்க முடியாது" எனக் கூறி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## நியூ ஜல்பைகுரி - குவாஹாத்தி இடையே வடகிழக்கு பகுதியின் முதல் வந்தே பாரத் ரயில்: பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்



**புதுடெல்லி**: மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பை குரியிலிருந்து அசாம் மாநிலத்தின் குவாஹாட்டிக்கு வந்தே பாரத் ரயில் சேவையை பிரதமர் மோடி நேற்று காணொலி மூலம் தொடங்கி வைத்தார். இது வடகிழக்கு பகுதியில் இயக்கப்படும் முதல் வந்தே பாரத் ரயிலாகும்.

மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பைகுரியிலிருந்து, அசாம் மாநிலத்தின் குவாஹாட்டிக்கு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இயக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ரயிலை பிரதமர் மோடி நேற்று காணொலி மூலம் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த விழாவில் அசாம் ஆளுநர் குலாப் சந்த் கட்டாரியா, முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மா,மத்திய அமைச்சர்கள் அஸ்வினி வைஷ்ணவ், சர்பானந்த சோனோவால் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

வடகிழக்கு பகுதிகளுக்கு போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்துவதில் மத்தியில் இருந்தமுந்தைய அரசுகள் முன்னுரிமை அளிக்கவில்லை. ஆனால் கடந்த 9 ஆண்டுகளில் நிலைமை மாறிவிட்டது. அனைத்து பிரிவுகளிலும் போக்குவரத்து இணைப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது.

**சுற்றுலாவை ஊக்குவிக்கும்:** தற்போது தொடங்கப்பட்டுள்ள வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சுற்றுலாவை ஊக்குவிக்கும். நியூஜல்பைகுரி - குவாஹாட்டி இடையேஉள்ள 407 கி.மீ தூரத்தை ஐந்தரை மணி நேரத்தில் கடந்துவிடலாம்.

வடகிழக்கு பகுதிகளுக்கான ரயில்வே பட்ஜெட் 4 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 2014-ம்ஆண்டுக்கு முன் வடகிழக்கு பகுதிகளுக்கான ஆண்டு ரயில்வே பட்ஜெட் சுமார் ரூ.2,500 கோடியாகஇருந்தது. தற்போது அது ரூ.10,000கோடியாக அதிகரிக்கப்பட்டுள் ளது. கடந்த 9 ஆண்டுகளில் வடகிழக்கு பகுதி முழுவதும் ரயில்வேபோக்குவரத்து விரிவடைந்துள் ளது. வடகிழக்கு மாநிலங்களின் அனைத்து தலைநகரங்களும் ரயில் போக்குவரத்து மூலம் விரைவில் இணைக்கப்படும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

இது தவிர அசாமில் 182 கி.மீ தூரத்துக்கு மின்மயமாக்கப்பட்ட ரயில் போக்குவரத்து வழித்தடத் தையும், லும்டிங் என்ற இடத்தில் ரயில் என்ஜின் பணிமனையையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

## இந்தியாவில் சமையல் எண்ணெய் விலை அதிகரிப்புக்கு காரணம் என்ன?



நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சமையல் எண்ணெய் விலை எப்போதுதான் குறையும் என்ற கேள்வி, ஏழை மற்றும் நடுத்தர வர்க்க குடும்பங்களில் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்தியாவில் எண்ணெய் விலை உயரக் காரணம் என்ன? எண்ணெய் வணிகம் எத்தகைய கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது?

விலையை குறைக்க வாய்ப்பு இருக்கிறதா? - இந்தக் கேள்விகளுக்கு விடை காண்போம்.

இன்றியமையாத உணவுப் பொருட்களில் ஒன்று சமையல் எண்ணெய். சந்தையில் இதன் விலை உயரும்போது இருக்கும் வேகம் குறையும்போது இருப்பதில்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது, சமையல் எண்ணெய்யை பெருமளவில் நாம் இறக்குமதி செய்வதுதான். நமது தேவையில் சுமார் 60 சதவீத சமையல் எண்ணெயை இறக்குமதியின் மூலமே நாம் பூர்த்தி செய்து வருகிறோம். உலகிலேயே அதிக அளவில் சமையல் எண்ணெய்யை இறக்குமதி செய்யும் நாடு இந்தியா. அதிக அளவில் சமையல் எண்ணெய் பயன்படுத்தும் இரண்டாவது நாடு இந்தியா.

நிதி ஆண்டு, கல்வி ஆண்டு என்பதுபோல் எண்ணெய் நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படுவது ஆயில் ஆண்டு. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் தொடங்கும் ஆயில் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் முடிவடையும். இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் இரண்டு வகையானது. ஒன்று சமையலுக்குப் பயன்படுத்தப்படக்கூடியது; மற்றது துணி சோப்பு, குளியல் சோப்பு, பெயின்ட் உள்ளிட்டவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பயன்படுத்தக்கூடியது. நடப்பு எண்ணெய் ஆண்டின் முதல் அரையாண்டில் மட்டும் 80 லட்சத்து 2 ஆயிரத்து 36 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய்யை நாம் இறக்குமதி செய்திருக்கிறோம். இதே காலகட்டத்தில் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 345 மெட்ரிக் டன் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான எண்ணெய்யை இறக்குமதி செய்திருக்கிறோம்.

நாம் இறக்குமதி செய்யும் எண்ணெய்யின் அளவு கூடிக்கொண்டே இருக்கிறது. இதற்கு முந்தைய எண்ணெய் ஆண்டில் இதே காலகட்டத்தில் நாம் இறக்குமதி செய்த சமையல் எண்ணெயின் அளவு 65 லட்சத்து 43 ஆயிரத்து 3 மெட்ரிக் டன்; தொழிற்சாலைகளுக்கான எண்ணெய்யின் அளவு ஒரு லட்சத்து 64 ஆயிரத்து 571

மெட்ரிக் டன். இரு வகையான எண்ணெய்களின் இறக்குமதியைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் நடப்பு எண்ணெய் ஆண்டின் முதல் அரையாண்டில் அதற்கு முந்தைய காலகட்டத்தைவிட 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

சமையல் எண்ணெய்யைப் பொறுத்தவரை சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், சுத்திகரிக்கப்படாத எண்ணெய் என இரு வகை எண்ணெய்களை நாம் இறக்குதி செய்கிறோம். நடப்பு எண்ணெய் ஆண்டின் முதல் அரையாண்டில் 11 லட்சத்து ஆயிரத்து 347 மெட்ரிக் டன் சுத்திரிக்கப்பட்ட எண்ணெய்யையும், 69 லட்சத்து 689 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யையும் நாம் இறக்குமதி செய்துள்ளோம்.

சுத்திகரிக்கப்பட்ட, வாசனை நீக்கப்பட்ட பாமாலின் எண்ணெய், சுத்திகரிக்கப்படாத பாமாயில், சுத்திகரிக்கப்படாத சோயாபீன் எண்ணெய், சுத்திகரிக்கப்படாத சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றையே நாம் அதிகம் இறக்குமதி செய்கிறோம். இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, அர்ஜென்டினா, பிரேசில், உக்ரைன், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் இருந்துதான் நாம் அதிக அளவில் சமையல் எண்ணெயை இறக்குமதி செய்கிறோம்.

இவை தவிர கடலை எண்ணெய், நல்லெண்ணைய், ஆளிவிதை எண்ணெய், பருத்திவிதை எண்ணெய், ஆமணக்கு எண்ணெய் உள்ளிட்ட எண்ணெய்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் 40 சதவீத சமையல் எண்ணெய் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

உள்நாட்டு சந்தையில் சமையல் எண்ணெய்களின் மொத்த விலை குறித்த பட்டியலுக்கும் அவற்றின் சில்லறை விற்பனைக்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகிறது. மொத்த விலை பட்டியலின்படி கடலை எண்ணெய் விலை ஒரு கிலோ ரூ.162-க்கும், நல்லெண்ணெய் விலை கிலோ ரூ.272-

க்கும், ஆளிவிதை எண்ணெய் விலை கிலோ ரூ.89-க்கும் விற்பனையாகிறது. பருத்தி எண்ணெய் கிலோ ரூ.86-க்கும், ஆமணக்கு எண்ணெய் விலை கிலோ ரூ.116-க்கும் விற்பனையாகிறது. ஆனால், இவற்றின் சில்லறை விற்பனை விலை மிகவும் அதிகமாகவே இருக்கிறது.

எண்ணெயை பாக்கெட்டில் அடைப்பதற்கான செலவு, போக்குவரத்துச் செலவு, ஏஜென்ட்டுகள், டிஸ்ட்ரிபூட்டர்களுக்கான கமிஷன், கடைசியாக கடைகளில் விற்கும் கடைக்காரருக்கான லாபம் என எல்லாம் சேருவதால் இவற்றின் சில்லறை விலை கூடுதலாக இருப்பதாகக் கூறுகின்றனர் இது குறித்து அறிந்தவர்கள். அதேநேரத்தில், இவ்விஷயத்தில் அரசு தனது கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

60 சதவீதம் அளவுக்கு வெளிநாடுகளை நம்பி இருப்பதால், சர்வதேச சந்தை நிலவரத்துக்கு ஏற்ப உள்நாட்டில் அவற்றின் விலை மாறுகிறது என கூறும் நிபுணர்கள், எண்ணெய் இறக்குமதியைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தியை பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதோடு, சில்லறை விற்பனையகங்களில் அவை விற்கப்படும் விலை குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

EVA

EVA STALIN IAS ACADEMY